## 1000 பேருக்கு வேலைவாய்ப்பு: மஹிந்திரா & மஹிந்திரா நிறுவனத்தின்

# ரூ.210 கோடி மதிப்பிலான மின்கலன் பரிசோதனை ஆய்வகம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஆக. 1 -**

**செங்கல்பட்டு மாவட்டத்தில் ரூ.210 கோடி முதலீட்டில், 1000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மஹிந்திரா & மஹிந்திரா நிறுவனம் அமைத்துள்ள மின்கலன் பரிசோதனை ஆய்வகத்தினை திறந்து வைத்து, சிப்காட் செய்யார் தொழிற் பூங்காவில் ரூ.290 கோடி முதலீட்டில் விபத்து பரிசோதனை ஆய்வகம் அமைக்கும் பணிக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.07.2023) தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மஹிந்திரா ஆராய்ச்சி மையத்தில் (Mahindra Research Valley) 210 கோடி ரூபாய் முதலீட்டில், 1000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மஹிந்திரா & மஹிந்திரா நிறுவனம் நிறுவியுள்ள மின்கலன் பரிசோதனை ஆய்வகத்தை (Battery Test Lab) திறந்து வைத்து, திருவண்ணாமலை மாவட்டம், சிப்காட் செய்யார் தொழிற்பூங்காவில் உள்ள மஹிந்திரா SUV பரிசோதனைத் தளத்தில் 290 கோடி ரூபாய் முதலீட்டில் மின் வாகன விபத்து பரிசோதனை ஆய்வகம் (EV Crash Test Lab) அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

### சமச்சீரான சமூக - பொருளாதார வளர்ச்சி!

2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி அடைந்திட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கினை எய்துவதற்காக தமிழ்நாட்டிற்கு பல்வேறு முதலீட்டு திட்டங்களை பெருமளவில் ஈர்த்து, இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கவும், மாநிலத்தில் அனைவரையும் உள்ளடக்கிய சமச்சீரான சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்திடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் பலனாக, இவ்வரசு பொறுப்பேற்றது முதல் இதுநாள் வரை, 4,10,561 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.2,73,448 கோடி மதிப்பிலான 224 முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. மேலும் சில திட்டங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளிக்கப்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மஹிந்திரா & மஹிந்திரா நிறுவனத்தின் சார்பில் செங்கல்பட்டில் மின்கலன் பரிசோதனை ஆய்வகத்தை திறந்து வைத்தல் மற்றும் சிப்காட் செய்யாறு தொழிற்பூங்காவில் விபத்து பரிசோதனை ஆய்வகம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்

மஹிந்திரா குழுமத்தின் ஒரு அங்கமான மஹிந்திரா & மஹிந்திரா நிறுவனம், மோட்டார் வாகன உற்பத்தியில் புகழ்பெற்று விளங்கும் ஒரு இந்திய பன்னாட்டு நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் 2012ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மஹிந்திரா வேர்ல்ட் சிட்டியில், 125 ஏக்கர் பரப்பளவில் ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புத் திட்டமான மஹிந்திரா ஆராய்ச்சி மையத்தை (Mahindra Research Valley) நிறுவியது. இது உலக அளவில், மோட்டார் வாகனம் மற்றும் டிராக்டர் தயாரிப்புகளின் முதலாவது ஒருங்கிணைந்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையமாகும். இந்த மையம், சமீப காலங்களில், XUV 500, THAR, XUV300, KUV100, Alturas, TUV300 மற்றும் Arjun Novo, Yuvo and Jivo போன்ற பல புதிய வகை வாகனங்கள் மற்றும் டிராக்டர்களை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது. மேலும் இந்நிறுவனம், சிப்காட்செய்யார் தொழிற் பூங்காவில் 454 ஏக்கர் பரப்பளவில் அமைத்துள்ள சோதனைத் தடத்தில், வாகன சவாரி, கையாளுதல் மற்றும் பிற திறன் சரிபார்ப்புகள் போன்றவற்றை மேற்கொண்டு வருகிறது.

### 2022 ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம்!

மஹிந்திரா & மஹிந்திரா நிறுவனம், ஜூலை 4, 2022 அன்று, தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இதன்படி, ஏப்ரல் 2022 முதல் 4 ஆண்டு காலத்திற்குள், கூடுதலாக 500 கோடி ரூபாய் முதலீடு மேற்கொள்ளுவதாகவும், குறைந்தபட்சம் 850 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் அந்நிறுவனம் உறுதியளித்திருந்தது. அதன்படி, செங்கல்பட்டு மாவட்டத்தில் 210 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மஹிந்திரா ஆராய்ச்சி மையம் (MRV), சிப்காட் செய்யார் தொழிற்பூங்காவில் 290 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மஹிந்திரா SUV வாகனங்களுக்கான பரிசோதனைத் தளம் (MSPT) மற்றும் கோயம்புத்தூரில் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தகவல் தொழில் நுட்ப மையம் ஆகிய திட்டங்களை செயல்படுத்த முன்வந்துள்ளது.

### ஒரு வருட காலத்திலேயே தொடக்க விழா!

அதன்படி, முதலாவது திட்டமான செங்கல்பட்டு மாவட்டத்தில் 210 கோடி ரூபாய் மதிப்பீடில் அமைக்கப்பட்டுள்ள மஹிந்திரா மின்கலன் பரிசோதனை மையத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட ஒரு வருட காலத்திலேயே இதன் தொடக்க விழா நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

மேலும், மஹிந்திரா நிறுவனம் சிப்காட் - செய்யாறு தொழிற்பூங்காவில் 290 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மின் வாகன விபத்து பரிசோதனை ஆய்வகம் மற்றும் மின்கலன் கட்டுருவாக்க மையம் நிறுவும் திட்டத்திற்கு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

### தமிழ்நாட்டின் நிலையை மேலும் வலுப்படுத்தும்!

அகில இந்திய அளவில், மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக விளங்கி வருகிறது. இத்தகு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள், இத்துறையில் தமிழ்நாட்டின் நிலையை மேலும் வலுப்படுத்தும்.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, மஹிந்திரா & மஹிந்திரா நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் ஆர். வேலுசாமி, திருமதி அபாந்தி சங்கரநாராயணன், எஸ். சக்திவேலன் மற்றும் போய்ட்டா தனஞ்சயராவ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை! முதல் பக்கத் தொடர்ச்சி

'திராவிடம்' என்ற சொல் ஒருகாலத்தில் இடத்தின் பெயராக, இனத்தின் பெயராக, மொழியின் பெயராக இருந்தது. இன்று அது ஒரு அரசியல் கோட்பாட்டின் பெயராக இருக்கிறது. இதனைத்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சொல்லி வருகிறார்கள். 'திராவிடம்' என்ற அரசியல் கோட்பாட்டு வடிவம் என்பது பண்டித அயோத்திதாசர், சர்.பிட்டி. தியாகராயர், டாக்டர் நடேசனார், டி.எம்.நாயர், தந்தை பெரியார், இரட்டைமலை சீனிவாசன், எம்.சி.ராஜா, பேரறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன், தமிழினத் தலைவர் கலைஞர் போன்றவர்களால் கடந்த நூறு ஆண்டுகளாக வளர்த்தெடுக்கப்பட்ட அரசியல் கருத்தியல் ஆகும்.

'சாதி பேதமற்ற திராவிடர்காள்' என்று அழைத்தவர் பண்டித அயோத்திதாசர். தமிழ் என்பதே அதனை உச்சரிக்க முடியாதவர்களால் 'திரமிள' எனத் திரிந்து அழைக்கப்பட்டது என்பது மொழியியல் அறிஞர்கள் கருத்து. எனவே தான் தமிழ் திராவிடம் என்பதை ஒரே பொருள் தரும் இருவேறு சொற்களாக பயன்படுத்தினார் தந்தை பெரியார்.

### எங்கே பிரிவினை?

இத்தகைய திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகள் என்பவை, சுயமரியாதை, சமூகநீதி, சமதர்மம், மொழிப்பற்று, இன உரிமை, மாநில சுயாட்சி, இந்தியக் கூட்டாட்சி ஆகும். இதனை உள்ளடக்கியது தான் 'திராவிட மாடல்'ஆட்சியியல் கோட்பாடு ஆகும். தனது ஆட்சியின் நெறிமுறையாக இதனை வடித்துக் கொடுத்து செயல்படுத்தி வருகிறார் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள். 'எல்லார்க்கும் எல்லாம்' என்பது தான் தனது இலக்காக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு வருகிறார்கள். இதில் பிரிவினை எங்கே இருக்கிறது?

திராவிட மாடல் ஆட்சியின் அனைத்து சட்டமும், திட்டமும் அனைத்து மக்களுக்கும் பொதுவானதே தவிர, யாரையும் வேறுபடுத்தி பாகுபடுத்தி பார்ப்பவை அல்ல. கோடிக்கணக்கானவர்களுக்கு இலட்சக் க ண க் கா ன வ ர் க ளு க் கு நன்மை தரும் திட்டங்களைத் தான் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைவரும் சூத்திரர்கள் என்ற கருதுகோளை விதைத்தது மனு நூல். அதன் 10ஆவது அத்தியாயம் 44ஆவது சூத்திரத்தில் தமிழகம் என்பது திராவிடம் என்றே அழைக்கப்படுகிறது. "பௌண்டரம், ஔண்டரம், திராவிடம், காம்போசம், யவநம், சகம், பரதம், பால்ஹீகம், சீநம், கிராதம், தநதம், கசம் இத் தேசங்களை யாண்டவர்களனைவரும் மேற்சொன்னபடி சூத்திரராய்விட்டார்கள்" என்கிறது மனு.

எது தமிழர்களைக் கொச்சைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட சொல்லோ, அதனையே அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தியது திராவிட இயக்கம். இத்தகைய திராவிட இயக்கமானது கடந்த நூறு ஆண்டு காலமாக, தமிழ்நாட்டின் எழுச்சிக்கும் மீட்சிக்கும் உணர்ச்சிக்கும் உயர்வுக்கும் அடித்தளம் அமைத்துவிட்டதே என்ற கோபத்தில் திராவிடம் என்ற சொல்லின் மீது தனது காழ்ப்புணர்ச்சியைக் காட்டி வருகிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி.

அவருக்கு 'தமிழ்நாடு' என்ற சொல் பிடிக்கவில்லை. அதற்காக, தமிழ்நாடு என்ற மாநிலத்தின் பெயரை மாற்றிக் கொள்ள முடியாது. அவருக்கு 'திராவிட இயக்கம்' பிடிக்கவில்லை. அதற்காக திராவிடம் என்ற சொல்லை நாங்களும் மாற்றிக் கொள்ளப் போவது இல்லை. அடுத்து என்ன செய்யப் போகிறார் ஆளுநர்?

### குடைச்சல் தருகிறார்!

ஆளுநராக வந்தவர், இந்த மாநிலத்துக்கு ஆக்கபூர்வமாக ஏதாவது செய்திருக்கிறாரா என்றால் அதுவும் இல்லை. தினமும் ஏதாவது புலம்பிக் கொண்டு இங்குள்ள அரசியல் களத்தை குழப்ப முயற்சித்து வருகிறார். ஆளும் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குக் குடைச்சல் ஏற்படுத்தி வருகிறார். சனாதன வர்ணாசிரம சக்திகளுக்கான திண்ணைப் பிரச்சாரக் களமாக ஆளுநர் மாளிகையை மாற்றிக் கொண்டு வருகிறார்.

'ஆளுநர் பதவி என்பது மாநில அரசு நிர்வாகத்தின் ஓர் அங்கம்' என்பதை மறந்து அரசுக்கு எதிரானவர்களோடு சேர்ந்து சதியாலோசனை மண்டபமாக, கிண்டி மாளிகையைப் பயன்படுத்தி வருகிறார். கடந்த அரைநூற்றாண்டாக அரசியல் களத்தில் இருந்து துடைத்தெறியப்பட்ட ஆரிய அரசியல் சக்திகள், தங்களது சாயம் போன சனாதனப் புத்தகங்களுக்கு ஆர்.என்.ரவியை வைத்து புதிய பொழிப்புரை எழுத வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

### கவலை இல்லை!

எந்த அவதாரம் போட்டு வந்தாலும் ஆரிய மாயையை அடையாளம் காணும் பேரறிஞர் அண்ணாவின் தம்பிகள் நாங்கள். முத்தமிழறிஞர் கலைஞரின் உடன்பிறப்புகள் நாங்கள். ஆர்.என்.ரவியின் அன்றாடப் புலம்பல்கள் பற்றி எல்லாம் எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. அவரை நாங்கள் பொருட்படுத்தவே இல்லை என்பது தான் உண்மை.

'ஆளுநர் எங்களுக்கு பிரச்சாரக் கருவி தான். இங்கே இருந்து அவரை மாற்றி விடக் கூடாது. அவர் இருந்தால் தான் நம்முடைய கொள்கைகளை நாம் வளர்க்க முடியும்' என்று முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். திராவிட இயக்கத்தின் கொள்கைகள் தமிழ்நாட்டு மக்கள் மனதில் பட்டை தீட்டப்பட்ட வைரமாக மின்னுவதற்கு நாள்தோறும் தொண்டாற்றி வரும் ஆளுநர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தனது அறிக்கையில் குறிப்பிட்டார்.

## 'வாட்ஸ் அப்'பில் வரும் செய்தி!




### தனது கருத்துகள் மூலம் மேலும் மேலும் நகைப்புக்கு ஆளாகிறார்!


# காரல் மார்க்ஸ் பற்றி பேச ஆளுநருக்கு தகுதியுள்ளதா?

## 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கேள்வி!

சென்னை, ஆக. 1-

தனது கருத்துகள் மூலம் மேலும் மேலும் ஆளுநர் நகைப்புக்கு ஆளாகி வருகிறார் என்றும் காரல் மார்க்ஸ் பற்றி பேச ஆளுநருக்கு தகுதியுள்ளதா? எனவும் 'தீக்கதிர்' நாளேடு 31.7.2023 தேதியிட்ட இதழில் கேள்வி எழுப்பியுள்ளது.

அது வருமாறு:-


தீக்கதிர்
2023 ஜூலை 31 திங்கள்கிழமை

காரல் மார்க்ஸ் பற்றி பேச ஆளுநருக்கு தகுதி உள்ளதா?

தமிழ்நாடு ஆளுநர் நாள்தோறும் ஏதாவது உளறிக் கொட்ட வேண்டும் என்பதை ஒரு கடமையாக கொண்டிருப்பார் போலும். "குடும்பமாக இருப்பதிலும் சமூகமாக இருப்பதிலும் காரல் மார்க்ஸ் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. ஏனென்றால் தனிமனித வளர்ச்சியை குடும்பம் தடுக்கும் என்று அவர் நம்பினார். அது பார்ப்பதற்கு அழகாக இருக்கும் ஆனால் வாழ்க்கைக்கு உகந்தது அல்ல"- என்று ஒரு நூல்வெளியீட்டு விழாவில் ஆளுநர் ஆர்.என். ரவி பேசியுள்ளார்.

தமிழ்நாடு ஆளுநர் நாள்தோறும் ஏதாவது உளறிக் கொட்ட வேண்டும் என்பதை ஒரு கடமையாக கொண்டிருப்பார் போலும். "குடும்பமாக இருப்பதிலும் சமூகமாக இருப்பதிலும் காரல் மார்க்ஸ் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.. ஏனென்றால் தனிமனித வளர்ச்சியை குடும்பம் தடுக்கும் என்று அவர் நம்பினார். அது பார்ப்பதற்கு அழகாக இருக்கும் ஆனால் வாழ்க்கைக்கு உகந்தது அல்ல" என்று ஒரு நூல்வெளியீட்டு விழாவில் ஆளுநர் ஆர்.என். ரவி பேசியுள்ளார்.

மார்க்ஸ் அவர்கள் குடும்பத்தையோ அல்லது சமூகத்தையோ சிறுமைப்படுத்தி எங்கேயும் எப்பொழுதும் பேசியதும் இல்லை; எழுதியதும் இல்லை. மாறாக குடும்பம் மற்றும் சமூகம் குறித்தும் அவை மனிதன் வாழ்வில் உருவாக்கும் தாக்கங்கள் குறித்தும் அளப்பரிய நம்பிக்கையை கொண்டிருந்தார். அதனால் தான் சமூக மாற்றம் தேவை எனும் முடிவுக்கும் வந்தார். இவையெல்லாம் ஆளுநர் ஆர்.என்.ரவி போன்றவர்களுக்கு எப்படி தெரிந்திருக்க முடியும்?

மார்க்ஸ் அவர்கள் தனது மனைவியை காதலித்துத்தான் திருமணம் செய்துகொண்டார் என்பதை ரவி அறிவாரா? பிரஷ்ய அரச குடும்பத்தில் பிறந்த ஜென்னி தனது காதலன் மார்க்சுக்காக ஆடம்பர வாழ்வை துறந்து அவருடன் இன்னல்களும் அடக்குமுறைகளும் நிறைந்த வாழ்வில் ஒன்றாக பயணித்தார் என்பது ரவிக்கு தெரியுமா?

வாழ்வின் அனைத்து அம்சங்களையும் ரசித்தவர் மட்டுமல்ல; பல அடக்குமுறைகள் தந்த வலிகளுக்கு இடையேயும் அந்த ரசனையை மார்க்ஸ் கை விட்டது இல்லை. அதில் அவருக்கு பக்கபலமாக இருந்தது அவர் குடும்பம்தான்! மார்க்ஸ் தனது குடும்பத்தை மிகவும் நேசித்தார். தனது காதல் மனைவியும் அவரது மூன்று புதல்விகள் ஜென்னி/லாவ்ரா/எலனோர் ஆகியோரும் சக குடும்ப உறுப்பினர்கள் மட்டு மல்ல; சக இயக்க போராளிகளும் கூட! இவர்களுடன் இணைக்க வேண்டிய இன்னொரு மகத்தான பெயர் பிரடெரிக் ஏங்க்கெல்ஸ்.

சமூகத்தையும் வேண்டாம் என மார்க்ஸ் நினைத்ததாக ஆர்.என்.ரவி கூறுகிறார். இதை விட கேடு கெட்ட பொய் எதுவும் இருக்க இயலாது. காரல் மார்க்ஸ் (ஏங்கெல்சுடன் இணைந்து) உருவாக்கிய மிகப் பெரிய கோட்பாடே சமூகத்தை பற்றியது தானே! "சமூக வாழ்வே சமூக சிந்தனையை நிர்ணயிக்கிறது. சமூக சிந்தனை சமூக வாழ்வை நிர்ணயிக்க வில்லை" எனும் மகத்தான பொருள் முதல்வாத கருத்தை சமூகத்துக்கு பொருத்தியவர் காரல் மார்க்ஸ்.

ஆனால் ஒரு வகையில் ஆர்.என்.ரவி சொன்னது சரிதான்! மார்க்ஸ், சமூகம் வேண்டாம் என்று சொன்னார். ஆனால் எந்த சமூகத்தை? முதலாளித்துவ சமூகத்தை வேண்டாம் எனவும் அதற்கு சமாதி கட்ட வேண்டும் எனவும் சோசலிச சமூகம் படைக்கப்பட வேண்டும் எனவும் கூறினார். மார்க்சின் வழியில் அதை உரக்கச் சொல்வதில் உழைப்பாளிகளுக்கு எந்த தயக்கமும் இருக்காது. ஆனால் ஆளுநர் தனது கருத்துகள் மூலம் மேலும் மேலும் நகைப்புக்கு ஆளாகிறார் என்பதே உண்மை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு அரசின் தோழி திட்டம் பாதுகாப்பானது!

## பெண்கள் பாராட்டு!

சென்னை, ஆக 1-

பாதுகாப்பான விடுதிகளை தேடி பெண்கள் இனி அலைய வேண்டாம்: தோழி திட்டம் பாதுகாப்பாக பார்த்து கொள்ளும்; தமிழ்நாடு அரசின் தங்கும் விடுதிக்கு பெண்கள் பாராட்டு

புதிய மாவட்டங்களுக்கு பணி நிமித்தமாக செல்லும் பெண்கள் இனி பாதுகாப்பான விடுதிகளை தேடி அலைய வேண்டாம். அவர்களை 'தமிழ்நாடு அரசின் தோழி எனும் தங்கும் விடுதி' பாதுகாப்பாக பார்த்துக் கொள்ளும். அரசின் இந்த திட்டத்துக்கு பெண்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர். தமிழ்நாடு அரசு பெண்களின் முன்னேற்றம், வளர்ச்சிக்காக பல்வேறு புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக மகளிர் உரிமைத் தொகை, இலவச பேருந்து பயணம், புதுமைபெண் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள பெண்கள் அரசின் திட்டத்தால் மாதம் ஒன்றுக்கு ரூ.888 பஸ் கட்டணத்தை சேமிக்கின்றனர். இது, திட்டக்குழுவின் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமங்களில் இருந்து நகரம் வரை உள்ள அரசு பள்ளி மாணவிகள் தற்போது உயர் கல்வி படிக்க காரணமாக இருப்பது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த இந்த திட்டம் தான். மேலும், பெண்களுக்கான மகளிர் உரிமைத்தொகை திட்டம் மூலமாக குடும்ப தலைவிகளுக்கு வரும் செப்.15ம் தேதி முதல் மறைந்த முன்னாள் முதல்வர் அண்ணாவின் பிறந்தநாளையொட்டி நடைமுறைக்கு வர உள்ளது.

இதன் மூலமாக ஒரு கோடி நடுத்தர மற்றும் ஏழை, எளிய குடும்ப தலைவிகள் பயனடைவார்கள். இவற்றின் தொடர்ச்சியாக தற்போது 'தோழி' எனும் பெயரில் தமிழக அரசின் சார்பில் மாநிலம் முழுவதும் 9 மாவட்டங்களில், பணிபுரியும் பெண்களுக்காகக் குறைந்த கட்டணத்தில் பிரத்யேக மகளிர் விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் வரும் நாட்களில் அடுத்தடுத்து கூடுதல் விடுதிகளும் திறக்கப்பட உள்ளன.

வாடகையோடு 1 மாத வாடகைத் தொகை அளவுக்கு, முன்கூட்டியே காப்புத் தொகை கொடுத்து மாணவிகள் சேர்ந்துகொள்ளலாம். ஒரு நாள் முதல் 15 நாட்களுக்குக் குறுகிய காலமாகவும் தங்கிக் கொள்ளலாம். தனி அறை தொடங்கி ஆறு பேர் வரை தங்கக்கூடிய அறைகள் வரை இங்கு உள்ளது. தோழி விடுதிகளில் சேர விரும்பும் பெண்கள் 9499988009 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு அல்லது techexe@tnwwhcl.in என்ற இமெயில் முகவரிக்கு இமெயில் அனுப்பி, கூடுதல் விவரங்களை அறியலாம். சென்னையில் உள்ள பிற பெண்கள் விடுதிகள் குறித்து முழுமையாக அறிய https://chennai.nic.in/hostel/ என்ற இணைப்பைக் க்ளிக் செய்து காணலாம். முழுமையான விவரங்களுக்கு: http://tnwwhcl.in என்ற இணையதளத்தைக் க்ளிக் செய்து, விடுதிகளின் முகவரி, கட்டணம், முன்பதிவு ஆகிய தகவல்களைப் பெறலாம்.

சென்னை மாவட்டத்தில் அடையாறில் , 2வது குறுக்கு தெரு, சாஸ்திரி நகரில் தோழி பெண்கள் விடுதி இயங்கி வருகிறது. சென்னை தோழி விடுதியில் ஒருவர் தங்கும் அறை, 2 பேர், 4 பேர், 6 பேர் தங்கும் அறைகள் என மொத்தம் 98 படுக்கை வசதிகள் உள்ளன.

செங்கல்பட்டு மாவட்டத்தில், எண்.6, 4வது தெரு, டிபென்ஸ் காலனி, நெல்லிக்குப்பம் ரோடு (சார் பதிவாளர் அலுவலகம் அருகில்), நந்திவரம், கூடுவாஞ்சேரி 603 202 என்ற முகவரியில் தோழி விடுதி இயங்கி வருகிறது.

கூடுவாஞ்சேரி தோழி விடுதியில் இருவர் தங்கும் அறை (ஏசி, ஏசி அல்லாத அறைகள் ), 4 பேர் தங்கும் அறைகள் என மொத்தம் 120 படுக்கை வசதிகள் உள்ளன.

பெரம்பலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம் உள்ளிட்ட 9 நகரங்களிலும் தோழி விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் முகவரிகளையும் அங்கு என்னென்ன வசதிகள் உள்ளன என்பது குறித்தும், https://www.tnwwhcl.in/ என்ற இணைய முகவரியில் விரிவாகக் காணலாம்.

**நன்றி: 'தினகரன்' 31.07.2023**